## **கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

## **Probate O.P.No.11/2022**

PW - 1

2023 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19 ஆம் நாள் புதன்கிழமை (1989 ஆம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு. எம்.என்.செந்தில்குமார், எம்.எல்., தனி நீதிபதி (தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர்/முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு) அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | சரஸ்வதி |
| கணவர் பெயர் | தனபால் |
| வயது | 61 |
| முகவரி | இடிகரை |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

25-02-2011 தேதிய ஆவண எண்.3142/2011 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப் பத்திரத்தின் இணைய சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகும். 24-09-2014 தேதிய ஆவண எண்.11308/2014 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரையப் பத்திரத்தின் இணைய சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகும். 05-07-1988 தேதிய ஆவண எண்.105/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3** ஆகும். மனு அயிட்டம் 1 சொத்திற்குண்டான வில்லங்கச் சான்றிதழின் இணைய நகல் **ம.சா.ஆ.4** ஆகும். மனு அயிட்டம் 2 சொத்திற்குண்டான வில்லங்கச் சான்றிதழின் இணைய நகல் **ம.சா.ஆ.5** ஆகும். மனு அயிட்டம் 3 சொத்திற்குண்டான வில்லங்கச் சான்றிதழின் இணைய சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆகும். மனு அயிட்டம் 1 சொத்திற்குண்டான வழிகாட்டி மதிப்பீட்டின் இணைய நகல் **ம.சா.ஆ.7** ஆகும். மனு அயிட்டம் 2 சொத்திற்குண்டான வழிகாட்டி மதிப்பீட்டின் இணைய நகல் **ம.சா.ஆ.8** ஆகும். மனு அயிட்டம் 3 சொத்திற்குண்டான வழிகாட்டி மதிப்பீட்டின் இணைய நகல் **ம.சா.ஆ.9** ஆகும். என் கணவரின் கனரா வங்கியில் சேமிப்பு கணக்கில் பாஸ் புத்தகத்தின் அசல் **ம.சா.ஆ.10** ஆகும். என் கணவரின்

கோயமுத்தூர் சிட்டி கோ-ஆப்ரேட்டிவ் பேங்கின் பாஸ் புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.11** ஆகும். கோயமுத்தூர் சிட்டி கோ-ஆப்ரேட்டிவ் பேங்கின்கணக்கு எண்.10506, 10507 சம்மந்தப்பட்ட டிபாசிட் ரசீதுகளின் ஜெராக்ஸ் நகல்கள் இரண்டு **ம.சா.ஆ.12** (வரிசை இரண்டு) ஆகும். என் கணவர் பெயரில் உள்ள T.N.66 W 9772 வாகனத்தின் பதிவுச் சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.13** ஆகும். (மசா.ஆ.13 அசலோடு ஒப்பீடு செய்து குறியிடப்படுகிறது) என் கணவர் பெயரில் உள்ள அபிராமி ரியல் எஸ்டேட்டின் பாஸ் புத்தகத்தின் எண்.A2201412000046 ன் அசல் **ம.சா.ஆ.14** ஆகும். என் கணவர் பெயரில் உள்ள அபிராமி ரியல் எஸ்டேட்டின் பாஸ் புத்தகத்தின் எண்.AD 201011000104 ன் அசல் **ம.சா.ஆ.15** ஆகும். என் கணவர் 15-04-2021 தேதி அன்று ஒரு பதிவு செய்யப்படாத உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். என் கணவரின் இறப்புச் சான்றிதழின் இணைய சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.16** ஆகும். 03-08-2021 தேதிய என் கணவரின் வாரிசு சான்றிதழின் இணைய சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.17** ஆகும். (எதிர்மனுதாரர் தரப்பில் வாரிசுரிமை குறித்து ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) என்னுடைய ஆதார் அட்டையின் புகைப்பட நகல் **ம.சா.ஆ.18** ஆகும். என் கணவர் பெயரில் உள்ள பாரத் ஸ்டேட் வங்கியின் பாஸ் புத்தகத்தின் அசல் **ம.சா.ஆ.19** ஆகும். 05-05-2021 தேதிய கேஸ் இணைப்பு சம்மந்தப்பட்ட பில் **ம.சா.ஆ.20** ஆகும். என் கணவர் எழுதி வைத்த மேற்படி உயில் சாசனம் சம்மந்தமாக நோட்டரி வழக்கறிஞர் சான்றிதழ் வழங்கியுள்ளார். மனுப்படி உத்திரவு செய்ய வேண்டுகிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டலின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/சரஸ்வதி,

ஒம்/எம்.என்.செந்தில்குமார்,
முதன்மை மாவட்ட நீதிபதி (பொறுப்பு)
கோயமுத்தூர்.